# சட்ட விழிப்புணர்வு இயக்கம்

**கீழக்கரை - இராமநாதபுரம் மாவட்டம்**

# அவசர விழிப்புணர்வு தகவல்




## வாக்காளர் பட்டியலில்

# ‘உங்க பேரு இருக்கா’ –

## உறுதிப்படுத்துங்கள்..
## உரிமையை பெறுங்கள்...

**07.09.2018 / 109**

இந்திய ஜனநாயகத்தின் இன்றியமையா வாழ்வுரிமை என்பது இந்திய குடிமக்களாகிய நமக்கு கிடைத்த 'வாக்குரிமை' தான். இது மக்களாட்சியில் மக்களுக்கு கிடைத்த மாசற்ற மகத்தான செல்வம் என்றால் மிகையாகாது. எனவே தான் ''வாக்குரிமை இல்லையேல்.. வாழ்வுரிமை இல்லை'' என்கிற விழிப்புணர்வினை மக்கள் மனதில் விதைக்க வேண்டிய அத்தியாவசியம் எழுந்துள்ளது.

**நம்மை யார் ஆள வேண்டும்..?** என்பதன் தலையெழுத்தை ஒற்றை விரல் கொண்டு நாம் தாம் எழுதியாக வேண்டும். வெகு சீக்கிரத்தில் வர இருக்கும் பாராளுமன்ற தேர்தலில் சிறுபான்மை சமுதாயங்களின் வாக்குரிமையை தடை செய்ய பாசிச சக்திகளின் கூட்டு முயற்சியாக சிறுபான்மை சமுதாய மக்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து இலட்சக்கணக்கில் நீக்கி இருப்பதாக அறிய முடிகிறது.

## இந்த பாசிச சதியை முறியடிப்பது எப்படி ?

கடந்த 01.09.2018 சனிக்கிழமை அன்று தமிழகம் மற்றும் புதுவை மாநிலங்களுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது. இந்த பட்டியல் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, தாலுகா அலுவகங்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளது.

இந்த வரைவு வாக்காளர் பட்டியலில் உங்களுடைய பெயர், 18 வயதிற்கு மேற்பட்ட உங்களுடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடைய பெயர் இருக்கிறதா..? என்பதை உறுதிப்படுத்தி கொள்வதோடு, அந்த வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கும் **பாகம் எண், வரிசை எண்** மற்றும் **பக்கம் எண்** ஆகியவற்றை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். முடிந்தால் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கும் பக்கத்தினை மொபைல் போனில் புகைப்படம் எடுத்து வையுங்கள்.

## வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டு இருந்தால்.. என்ன செய்வது ?

இந்த வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் நீக்கப்பட்டு இருந்தாலோ அல்லது புதிதாக பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், திருத்தம், முகவரி மாற்றம் ஆகியவை குறித்து விண்ணப்பிக்க வேண்டி இருந்தாலோ பின் வரும் தேதிகளில் நீங்கள் எப்போதும் வழமையாக வாக்களித்து வரும் உங்கள் ஊரில் உள்ள வாக்குச்சாவடியில் **காலை 9:30 முதல் மாலை 5:30** வரை நடைபெற இருக்கும் 'வாக்காளர் சிறப்பு முகாம்' நிகழ்விற்கு சென்று அதற்கான படிவங்களை பெற்று விண்ணப்பிக்கலாம்.

## 'வாக்காளர் சிறப்பு முகாம்' நடைபெற இருக்கும் தேதிகள்

| முகாம் தேதி | கிழமை |
|---|---|
| 09.09.18 | ஞாயிற்றுக் கிழமை |
| 23.09.18 | ஞாயிற்றுக் கிழமை |
| 07.10.18 | ஞாயிற்றுக் கிழமை |
| 14.10.18 | ஞாயிற்றுக் கிழமை |

# கவனத்தில் கொள்ள வேண்டியவை

**இதில் புதிய வாக்காளர்களாக விண்ணப்பிக்க வரும் 18 வயது நிரம்பிய இளம் வாக்காளர்கள் (31.12.2000 மற்றும் அதற்கு முன் பிறந்திருக்க வேண்டும்).**

**புதிய வாக்காளர்கள் அனைவரும் தங்களுடைய பகுதியில் இருக்கும் வாக்குச் சாவடிக்கு சென்று படிவம் - 6 ஐ பூர்த்தி செய்து பள்ளி கல்லூரி மாற்று சான்றிதழ், இரண்டு புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.**

**பெயர் நீக்கத்திற்கு படிவம் – 7 ஐ பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். வாக்காளர் அட்டையில் திருத்தத்திற்கு படிவம் - 8 ம், முகவரி மாற்றத்திற்கு படிவம் - 8A வும் பூர்த்தி செய்ய வேண்டும்.**

**ஏற்கனவே வாக்காளர்களாக உள்ளவர்களும் தங்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என சரி பார்த்துக் கொள்வதோடு, தங்கள் பெயர் நீக்கப்பட்டு இருந்தால் உடனடியாக உங்கள் வாக்குச் சாவடி மையத்தில் இருக்கும் சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரியிடம் தகவல் கூறினால், உங்களது பெயர்களை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்வார்கள். நம் ஜனநாயக கடமையை நிலை நாட்டி நம் தேசத்தை காத்திட அன்புடன் அழைக்கிறோம்.**

**நம் வாக்கு.. நம் உரிமை...**

கீழை நியூஸ்

KEELAI NEWS

**சமூகப் பொறுப்புடன்.. சட்டப் போராளிகள்...**